# சமணமும் சைவமும்

(17696



முத்தமிழ் நிலையம்

# சிறந்த - தமிழ் இலக்கியங்கள்

## மஹாமஹோபாத்தியாயர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் பதிப்பித்த நூல்கள்.

| | | |
|---|---|---|
| 1. | சீவக சிந்தாமணி மூலமும் உரையும் 2 பாகமுடையது | 15-0-0 |
| 2. | சிலப்பதிகாரம் ஷை 4-ம் பதிப்பு | 8-0-0 |
| 3. | மணிமேகலை ஷை | |
| 4. | உதயணன் பெருங்கதை ஷை | 7-0-0 |
| 5. | உதயண குமார காவியம் ஷை | 0-6-0 |
| 6. | உதயணன் பெருங்கதை வசனம் | 1-8-0 |
| 7. | மணிமேகலை வசனம் | 1-4-0 |

## கழகப் பதிப்பு நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | நேமிநாதம் உரையுடன் | 1-4-0 |
| 2. | நம்பியகப்பொருள் | 3-0-0 |
| 3. | வச்சணந்திமாலை | 0-12-0 |
| 4. | யசோதா காவியம் | 3-8-0 |
| 5. | அறநெறிச்சாரம் | 1-0-0 |
| 6. | சீவக சிந்தாமணி | 3-0-0 |
| 7. | மணிமேகலை (சிலப்பதிகார சுருக்கம்) | 2-8-0 |
| 8. | சூளாமணி சுருக்கம் | 2-8-0 |
| 9. | நாலடியார் உரையுடன் | 3-8-0 |
| 10. | நாலடியார் (மாணவர் பதிப்பு) | 0-12-0 |
| 11. | சிலப்பதிகார ஆராய்ச்சி | 1-4-0 |
| 12. | மணிமேகலை ஆராய்ச்சி | 1-0-0 |
| 13. | சீவக சிந்தாமணி ஆராய்ச்சி | 2-0-0 |
| 14. | யாப்பருங்கலக்காரிகை பழைய உரையுடன் | 1-12-0 |

## புரொபஸர் A. சக்கரவர்த்தி நயினார் M.A. I. E. S. பதிப்பு நூற்கள்.

| | | |
|---|---|---|
| 1. | மேருமந்தர புராணம் உரையுடன் | 6-0-0 |
| 2. | நீலகேசி - சமயதிவாகர வாமன முனிவர் உரையுடன் | 6-0-0 |
| 3. | நீலகேசி - உரைநடை இங்கிலீஷ் | 3-0-0 |
| 4. | **YESTERDAY & TO-DAY** | 1-8-0 |

## T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A. B.L. M.O.L. பதிப்பு

| | | |
|---|---|---|
| 1. | சூளாமணி முதல் நான்கு சருக்கம் செய்யுளும் உரைநடையும் | 1-8-0 |

---

**முத்தமிழ் நிலையம்,**

75, வரதாமுத்தியப்பன் தெரு, சென்னை 1.

26000

# சமணமும் - சைவமும்

(ஓர் அரிய ஆராய்ச்சி நூல்)

17696

ராவ்பஹதூர் - பேராசிரியர்
திரு. A. சக்கரவர்த்தி நயினர் M. A., I. E. S.
(Retired Principal, Government College.)

முத்தமிழ் நிலையம்
75, வரதாமுத்தியப்பன் தெரு
சென்னை 1.

முதற்பதிப்பு
1946.

விலை
அணா எட்டு

Printed at the
Jothi Press, Triplicane, Madras.
For, Q. H. M. S. No. 459-46. 1000 Copies.

# பொருளடக்கம்


1. சமணமும் சிவராத்திரியும் ... 1
2. வேதவேள்விக்குப் பொருள் என்ன ? ... 3
3. மொஹஞ்சதாரோ ஹாரப்பா ஆராய்ச்சியில் சமணர் ஆதிபகவான் ... 6
4. ஆத்மவித்தை யாசித்த பூசாரிகள் ... 7
5. புத்தமதக் கொள்கைக்கு விதையிட்ட ஆரியர் ... ... 10
6. புத்தாவதாரம் கற்பித்தல் ... 12
7. பௌத்தம் சமணத்துக்கு பிந்தியது ... 13
8. சைவமே சமணத்தின் பகுதியா ? ... 14
9. காபாலிக மதத் தோற்றம் ... 16
10. சிருஷ்டி வரலாறு ஒரு வியவகார கற்பனை 17
11. இன்ப துன்பங்களுக்குக் காரணம் அவரவர் கர்மமே ... ... 18
12. சமணசமத்தில் மோக்ஷம் ... ... 20
13. கடவுள் அவதாரஞ் செய்வதில்லை ... 21
14. ஆத்தும விடுதலை ... ... 22
15. சமணத்திலும் பிராமணீயத்திலுமுள்ள சடங்கு ஒற்றுமை ... ... 24
16. சமண சமயமே மூடப்பழக்க வழக்கங்களைக் கண்டித்த முதற் சமயம் ... 26

17. சாதிப் பாகுபாட்டுக்குப் பிறப்பு காரண மல்ல — பிராமணீயம் தோன்றிய வரலாறு ... ... 28
18. உலகத்துக்குப் பௌத்தத்திலும் சமணமே கொல்லாமையைப் போதித்தது ... 30
19. இந்திய நற்பண்புக்குச் சமண பௌத்தம் செய்த உதவி ... ... 32
20. அஹிம்ஸைக் கொள்கையைப் பின்பற்றிய அரசர்க்கரசர் நல்லாட்சிகள்
21. கைலாய மலையில் முதற் கோயில் ... 33

---

## திருத்தம்.

2-ம் பக்கம் 3-வது வரியின் தொடக்கத்தில்—மகாவீரர் இருபத்து நான்காவது தீர்த்தங்கரர். பகவான் பார்ஸ்வநாதர் இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரர்—என்று சேர்த்து வாசிக்கவும்.

# சமணமும்-சைவமும்

## 1. சமணமும் மகா சிவராத்திரியும்

சமண பௌத்த சமயங்களின் வரலாறு, அவற்றின் அடிப்படை உண்மைகள், அவை கூறும் சடங்குகள் என்ற மூன்று பகுதிகளாக இத்தலைப்பைப்பற்றிக் கருதலாம். அவ்விரு சமயங்களின் வேறுபாடுகளை அறிய இயலாதவராய்ப் பௌத்தத்திலிருந்து சமணம் தோன்றியதென்றோ, அன்றிப் பௌத்தமும் சமணமும் இந்து மதத்தின் பிரிவுகளென்றோ, தவறுகக் கருதுகின்ற சில படித்த மக்கள் இற்றை நாளினும் காணப்படுகின்றனர். அவ்விருபெரிய சமயங்களின் வரலாற்றைக் குறித்துக் காம்ப்ரிட் ஜ் (Cambridge) பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ள 'பண்டைய இந்திய வரலாற்று நூலிலே' அந்நூலைத் தொடுத்த அறிஞர்கள் நன்குழைத்து, ஆராய்ந்து, கீழ்க்கண்ட சிறந்த உண்மையை எழுதியுள்ளார்கள். பௌத்தத்திற்கு முன்னையது சமணம் என்பதும், கி. மு. 599-முதல் கி. மு. 527-வரை வாழ்ந்துவந்த **மகாவீர வர்த்தமானர்** சமணத்தைத் தோற்றுவித்தவரல்லர் என்பதும், அன்னருக்கு இருநூற்றைம்பது ஆண்டுகட்குமுன் வாழ்ந்த **பார்சவநாதர்**, வரலாற்று நூலிலே குறிக்கப் பெறுகின்றார் என்பதும், எல்லோ

ராலும் இக்காலத்திலும் ஒப்புக்கொள்ளப்பெறும் உண்மைகளாகும். சமணசமயப் பரம்பரைச் செய்திகளின்படி, மகாவீரர் மகாபாரதத்தில் புகழப்பெறுகின்ற கண்ணபிரானின் ஒன்றுவிட்ட சகோதரரும் 22-வது தீர்த்தங்கரருமாகிய **நேமிநாதர்** என்பவர் வேதங்களில் **அரிஷ்டநேமி** என்று குறிக்கப்பெறுவதைக் காண்கின்றோம். மகாபாரதக் கண்ணன் ஒரு **வாசுதேவராகச்** சமணர்களாலும் ஒப்புக்கொள்ளப் பெறுகின்றார். வருங்காலத்தில் ஒரு தீர்த்தங்கரராக அவர் பிறப்பாரென்று சமணர் கருதுகின்றனர். பண்டைய வரலாற்றினை இன்னும் ஆழ்ந்து நோக்கினால், **இக்ஷ்வாகு குழுவினைச்** சார்ந்த **விருஷப தேவ**ரென்னும் சமணர்களின் ஆதிதீர்த்தங்கரர், பண்டைய ஆரியருக்குத் தமது **அஹிம்சா தத்துவத்தைப்** போதித்து வந்ததைக் காண்கின்றோம். இதே விருஷபதேவர் இருக்குவேத பாட்டுக்களில் புகழப் பெறுகின்றார். பாகவதத்திலும் மற்றைய இந்து புராணங்களிலும் அவரது பெற்றோர் எப்பெயர்களால் குறிக்கப் பெறுகின்றார்களோ, அதே பெயர்களைக் கொண்டு சமண நூல்களும் அன்னாரைச் சுட்டுகின்றன. அவருடைய குமாரரின் பெயர் பரதன் என்பதாகும். இந்திய நாட்டின் புகழ் நிறைந்த சக்கரவர்த்தியாயிருந்தவர் இவரே. இவரது பெயரைக் கொண்டே இந்நாடு பாரதவருஷம் என்று அழைக்கப் பெற்றுள்ளது. இல்லறத்தில் நின்று * உழவு, வணிகம், கலைகள், கைத்தொழில்கள் முதலியன கற்

* சூடாமணி நிகண்டு.

றுக் கொடுத்து, மக்கட் சமுதாயத்தைப் பல குழுக்களாக அவரவருக்கு ஒதுக்கப்பெற்ற தொழில் முறைப்படிப் பிரித்து, ஆட்சி நடத்தினர். பிறகு துறவியின் நிலையையும் ஒழுக்கத்தையும் செயலில் மக்களுக்கு அறிவிக்க விரும்பி, தானே எல்லாவற்றையும் துறந்து இருப்பிடமில்லாது சுற்றித்திரியும் சந்நியாசியாக மாறினர். வியக்கத்தக்க தவத்தினை மேற்கொண்டதன் விளைவாக எல்லாவற்றையும் உணரும் **கேவல ஞானத்தை** அவர் பெற்றார். பலவகையான அல்லலுட்பட்டுத் துயருறுகின்ற சமுதாயத்தின் மாட்டுத் தனக்குண்டான எல்லையில்லாக் கருணையினால் தன்னையடுத்த மக்களுக்கு வீடுபேற்றிற்குரிய வழியைப் போதித்து வந்தார். நாட்டின் பலபாகங்களிலும் தனது அஹிம்சைக் கொள்கையை நெடு நாளாகப் பரப்பிய பிறகு கைலயங்கிரியை அடைந்தார். அங்குத்தான் அவருக்கு **நிர்வாணம்** கிட்டிற்று. அவர் நிர்வாணம் அல்லது மோக்ஷம் பெற்ற நாளைத்தான் **மகாசிவராத்திரி** எனச் சமணர்கள் கொண்டாடுகின்றனர்.

## 2. வேத வேள்விக்குப் பொருள் என்ன ?

விருஷபதேவர் பரப்பிய அஹிம்சைக் கொள்கையை ஒரு சிறந்த தத்துவம் எனப் போற்றி ஏற்று, அதன்வழி நடக்க ஒரு கூட்டத்தார் முற்பட்டனர். துன்புறுத்தலும் இரத்தவெறியுங்கொண்ட உயிர்ப் பலியோடு கூடிய யாகங்கள் பலவற்றை வேதங்களிற் கூறியபடி செய்துவந்த மக்களிடையே இக்கூட்டத்

தார் வாழவேண்டியதாயிற்று. எனினும் பௌத்தர்களும் அஹிம்சையைப் பின்பற்றிச் சமணர்களுடன் சேர்ந்து வேதங்களை வெளிப்படையாக மறுத்து வெறுப்பைக் காட்டினர். ஏனெனில் யாகங்கள் செய்வதால் ஏற்படும் உயர்வையும் பலன்களையும் வேதங்கள் சிறப்பாகக் கூறின. இந்திய நாட்டுச் சமயக் கொள்கையின் வரலாற்றில் அஹிம்சையை அடிப்படையாகக்கொண்ட கட்சியும், வேதங்களிற் கூறிய யாகங்களைச் செய்யும் ஒரு கட்சியும் எவ்விடத்தும் எக்காலத்தும் வாழ்ந்திருப்பதைப் பார்க்கின்றோம். இவற்றுள் யாதேனும் ஒன்று ஒருகாலத்தில் சிறப்பாகக் கருதப்பெற்றும், வேறொரு காலத்தில் மற்றையதொன்று ஆட்சி செலுத்தியும் வந்திருப்பதைக் காண்கின்றோம். வைதீக யாகங்களுக்கு முக்கிய பொருளாகிய **அஜம்** என்பதைப்பற்றி மாபாரதத்தில் ஒரு கதை சொல்லப்பெறுகின்றது. ஒருசமயம், தேவர்கள் ரிஷிகளிடையே அஜம் என்றசொல் எப்பொருளை ஒருதலையாகக் குறித்தது என்பதைப்பற்றி ஒரு வாதம் நடந்ததாம். அச்சொல் **வெள்ளாட்டினைக்** குறிக்கும்' என்று தேவர்கள் கூறினர். ஆனால் அஹிம்சையைப் பின்பற்றின முனிவர்கள் இப்பொருளை ஏற்காது '**மூன்றாண்டுகளுக்குமேல் ஒரே இடத்தில் சேர்த்து வைக்கப்பெற்ற முளைக்கும் வன்மை யிழந்த நெல்லைத்தான் அச்சொல் குறித்தது**' என வாதித்தனர். இருசாராரும் ஒத்த நிலையில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காது வாதித்தமையால் ஒருமுடிவு காண்பதற்காக **உபரிசரவாசு** என்ற அரசனை நாட வேண்டியதாயிற்று.

அவன் தேவர்கள்பால் அச்சம் கொண்டிருந்தான். எனவே அஜம் என்பது வெள்ளாட்டையே குறிக்கும் என ஒப்புக்கொண்டு தேவர்கள் சார்பில் தீர்ப்புக் கூறினான். முனிவர்கள் இத்தீர்ப்பைக் கேட்டு அதிர்ச்சியுற்றனர்; "வாசு எனப் பெயர்பூண்ட ஏ பெரிய அரசனே! யாது கூறினாய்? சிந்தித்துப் பார். வேதங்களின் தெய்வீகக் கூற்றின் பொருளை முற்றிலும் மாறான முறையில் தவறாக விளக்கிவிட்டாய். தவறான பொருளைச் சொன்னமையால் நீ தண்டனைக்குரியவனாகின்றாய். பூமி வெடித்துத் தன் வாயைத் திறந்து நின்னை விழுங்குமாக. மற்று எம் விளக்கம் தவறாகுமேல், அந்தத்தண்டம் எம்மைச் சாருமாக" என்று அந்த முனிவர்கள் சீற்றத்துடன் செப்பினர். அக்கணத்திலேயே படாரென்று பூமி வெடித்தது. பாதாள லோகத்தில் மிகக்கீழே உபரிசரவாசு அழுந்திவிட்டான். அன்றுமுதல் வேதமார்க்கத்தைப் பின்பற்றும் கூட்டத்தாரிடமிருந்து முனிவர்கள் பிரிந்துவிட்டனர். உயிர்ப்பலியை ஒப்பி அனுமதிக்கும் நிலைக்கு வேதங்கள் மாறிவிட்டமையால், அவற்றை முனிவர்கள் வெறுத்தொதுக்கினர். '**அஜைனயஷ்டவ்யாய**' என்ற வேதமந்திரத்திற்கு உபரிசரவாசு தப்பாகப் பொருள்கொண்ட கதை * சமண சமயத்துத் தெய்வீக நூற்களில் இம்மாதிரியே சொல்லப் பெற்றிருக்கிறது. வேதங்களைத் தாங்கள் ஒப்புக்

---

* தமிழிலும் இதைக்குறிக்கும் **நாரதர் சரிதை** என்ற பண்டையஜைன காவியம் ஒன்றிருந்ததென்பதைப் புறத்திரட்டால் அறியலாம்.

கொள்ளாததற்குக் காரணங்கள் கூறுமுகத்தான் இக்கதையைப் பயன்படுத்துகின்றனர். 'அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட பழைய வேதத்திற்கு முற்றிலும் மாறுபட்ட தவறான நூல்' என்று அவர்கள் கூறுகின்றனர்.

## 3. மொஹஞ்சதாரோ, ஹாரப்பா ஆராய்ச்சியில் ஆதிபகவான்

அஹிம்சையை உயிர்நாடியாகக் கொண்ட அந்த ஆதிவேதம் **இக்ஷ்வாகு** குலத்தைச் சார்ந்த **விருஷப தேவருடன்** தொடர்புப் படுத்தப் பெறுகின்றது. இருக்கு வேதப் பாட்டுக்கள் யாக்கப்பெறுதற்குப் பன்னெடு நாட்களுக்கு முன்பேயே இந்த 'விருஷபதேவ சமயம்' விளங்கியிருந்திருக்க வேண்டும். பண்டைய இந்திய நாட்டின் பழமையான பண்பாட்டினை (Culture) அறிவிக்கும் பல சின்னங்கள் **மொஹஞ்சதாரோ, ஹாரப்பா** ஆகிய விடங்களில் அகழ்ந்தெடுக்கப்பெற்ற புதைபொருள்களினின்றும் கிடைத்துள்ளமை இத்தகைய சமயம் நாட்டில் பரவியிருந்ததை வலியுறுத்துகின்றது. நிர்வாணமாக ஒரு யோகி நிற்கும் நிலையில் பல உருவங்கள் காணப்பெறுகின்றன. அக்காலத்திய மக்கள் வழிபட்ட உருவங்களாக அவற்றை அறிஞர்கள் கருதுகின்றனர். அஹிம்சா கொள்கையை மக்களிடையே பரப்பி, யோகம் அல்லது தபசின் முறைகளைத்தானும்

பயின்று பிறர்க்குங் காட்டிய சமண தீர்த்தங்கரரில் முதல்வராகிய விருஷப தேவரது ஆதிபகவான் சிலையாக அது இருக்கலாம். இருக்கு வேதப் பாட்டுக்களைச் சேகரித்த ஆரியரது வருகைக்கு வெகுகாலத்திற்கு முன்னதாக இக்ஷ்வாகு வம்சத்தைச் சார்ந்த விருஷபதேவ சமயம் விளங்கியிருத்தல் வேண்டும். சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரீகச் சின்னங்கள் இவ்வுண்மையை வலியுறுத்துகின்றன. கீழை நாட்டு அறிஞர்கள் ஆரியரது இரண்டாவது குடியேற்றத்தை இருக்குவேதம் குறிப்பதாகவும், விருஷப சமயத்தைப் பின்பற்றும் இக்ஷ்வாகுகள் ஆதி ஆரியர்கள் ஆவர் என்றும் கருதுகின்றனர்.

## 4. ஆத்மவித்தை யாசித்த பூசாரிகள்

காலம் செல்லச் செல்லப் பிந்திய ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்ததால், ஆதிஆரியர்கள் கிழக்கு நோக்கிப் படர்ந்து **காசி, கோசலம், விதேகம், மகதம்** முதலிய பகுதிகளில் குடியாக அமர்ந்து விட்டனர். **இருபத்து நான்கு தீர்த்தங்கரரும் க்ஷத்திரியரேயாவர். அவர்களுள் இருபதின்மர் இக்ஷ்வாகு மரபினர் ஆதலை நோக்க, இறும்பூதுண்டாகின்றது.** இக்ஷ்வாகு மரபினைச் சார்ந்த ரகு அரசர்கள் எல்லோரும் தங்கள் வாழ்க்கையை மாணவராகத் தொடங்கி, வாழ்வின் முற்பகுதியில் இல்லறத்தை மேற்கொண்டு இன்பம் துய்த்துப் பிற்பகுதியில் துறவு பூண்டு தபசினையாற்றி இறுதியில் விடுதலை

பெறுவதாகக் **காளிநாசர்** கூறுகின்றார். இக்ஷ்வாகு மரபின் க்ஷத்திரிய தீரர்களைப்பற்றிய சமண பரம்பரைச் செய்தி இக்கூற்றுடன் ஒன்றுபட்டுக் காண்கின்றது. மற்றைய நாட்டு வீரக் குலத்தாரைப் போலன்றி இந்நாட்டு வீரக் குலத்தினர் உண்மையை ஆராய்வதிலும், முடிவுகட்டும் வாதங்களிலும் மிகுதியாகக் கலந்துகொண்டதை நோக்க, நமக்குத் தனிப்பட்ட முறையில் அச்செய்தி விருப்பத்தைத் தருகின்றது. இதனினும் வியக்கத் தக்கது என்னையோ வெனின், இந்தியநாட்டு க்ஷத்திரியர் முதற்கண் உண்மையுணர்வையும், பின்னர் படிப்படியாக மற்றையவற்றையும் நாடிப்பெற்றனர் என்பதாகும். **உபநிஷத்துக்களில்** இந்தப் பொதுவான உண்மை விளங்குகின்றது. ஏனெனில் **அவற்றை இயற்றியவர் பெரும்பாலோர் க்ஷத்திரியரேயாவர்.** அஹிம்சைத் தத்துவத்தையும், உளத்தை நன்னெறி நிறுத்தும் ஒருவழிப்பட்ட யோகமார்க்கத்தையும் க்ஷத்திரியர் பெரிதும் பேணிச் சிறப்பித்தனர். அன்றியும், பழைய சாஸ்திரங்களைக் கட்டுப்பாடாகப் பின்பற்றிக் **குருபாஞ்சாலத்தின்** மேலைப் பகுதியில் வாழ்ந்து வந்த **பூசாரிகள்** வைதீக வேள்விகளைச் செய்யும் சடங்கு முறைகளைக் காட்டிலும், **ஆத்மவித்தையே** உயர் நிலையிலுள்ள தென்பதைத் தாங்கள் ஏற்றுக்கொண்டதாகக் கூறி, அந்த ஆத்ம வித்தையைத் தங்கட் கருளவேண்டுமென்று இரந்து பெற்றதை, க்ஷத்திரிய வீரர் பலரிடத்தில் பூசாரிகள் பலமுறை நாடிச் சென்றதை, உபநிஷத்துக்களில் காணப்பெறும்

விவாதங்கள் அறிவிக்கின்றன. மேலும் வைதீக யாகங்கள் பயனற்றமையோடு ஆத்ம உயர்வுக்கு முட்டுக்கட்டையாகவும் உள்ளன என்று வற்புறுத்திக் கண்டிக்கும் முறையில் ஆத்மவித்தை கூறப்பட்டுள்ளது. தவிர பிராமணங்களில் ஒரு சுவையான செய்தியும் காணப்படுகிறது. காசி, கோசலம், விதேகம், மகதம் முதலிய இடங்களில் வாழ்ந்தமக்களைப் **'பிரஷ்டர்கள்'**, சமயக் கொள்கையினின்றும் வேறுபடுகின்றவர்கள், கொள்கைகளை ஒப்பாதவர்கள் என்று அப்பிராமணங்களின் ஆசிரியர் குறிக்கின்றார். எனினும் அவர்கள் ஆரியரே யாவர் என்ற கருத்து அவருடைய கூற்றுள் அடங்கியுள்ளது.

காரணமறிய அதிக ஆராய்ச்சி வேண்டுவதில்லை. கங்கைச் சமவெளி ஆரியர்கள், அல்லது நாம் கருதுகின்றபடி கீழ்த்திசை ஆரியர்கள், கிழைப் பகுதிகளில் குடியேறி கீழ்மேலான சமயமுறையைப் பரப்பி வந்தனர். வைதீக யாகங்களைக் கண்டிப்பதோடு மட்டும் அவர்கள் அமையவில்லை. அதனைச் செய்வது பாவமென்றும் அதனைத் தவிர்ப்பதுதான் அறமென்றும் மக்களிடையேகூறிவந்தனர். இவ்வாறாகத் துலாக்கோலின் ஒருதட்டிலிருந்து பெருமையை நீக்கினதுமன்றி, மற்றொரு தட்டில் அதைச்சேர்த்து வேறுபாட்டை முன்னிலும் மிகைப்படுத்தி விட்டனர். இங்ஙனம் வைதீகச் சடங்குகளுக்கு மாறாகப் புரட்சி செய்து ஆத்மாவின் உயர்வைப் பிரசாரம் செய்த கிழை ஆரியர்களே, பண்டைய சமணச் சிந்தனையாளர் எனக்கருதலாம். இக்கருத்து உண்மைக்கு நெருங்கிய தொடர்புடையதாகும்.

## 5. புத்தமதக் கொள்கைக்கு விதையிட்ட ஆரியர்

கீழைநாடுகளில் வசித்துவந்த ஆரியர்களும், சிறப்பாக க்ஷத்திரியர்களும் பிராகிருதத்தை ஏதோ ஒரு முறையில் பேசினரென்றும், அதனைக்கண்டு குரு பாஞ்சாலத்தின் ஆரியர்கள் ஆரியமொழியின் தூய்மையைக் கெடுத்துப் பலவகையான கலப்பு நிலையில் வழுவி ஒலிக்கின்றனரென்று அவர்களை இழித்துக் கூறினரென்றும், மொழி வரலாறு நமக்கு அறிவிக்கின்றது. மிகப்பழமையான சமணசமய நூல்கள் பிராகிருத மொழியில் எழுதப்பெற்ற செய்தி எல்லோருக்கும் தெளிவாகத் தெரிந்தசெய்தியாகும். ஆகையால் காசி, கோசலம், விதேகம், மகதம் முதலிய இராச்சியங்களில் குடியேறியிருந்த ஆதி ஆரியர்கள் சமணர்களேயென்று சாஸ்திர முறைப்படியும் முடிவுகட்டலாம். இவ்வாறாக நாளடைவில் வடஇந்தியாவில் இரண்டு வெவ்வேறான கொள்கைகள் மக்களிடையே தலைதூக்கி நின்றன. (1) பஞ்சாப் சமவெளியில் குடியேறிய பிந்திய ஆரியர்கள் குருபாஞ்சால ஆரியர்களென்று அழைக்கப் பெற்றனர். வைதிக நாகரீகத்தின் விரிவான சடங்குகளையும் யாகங்களையும் விடாதுபற்றி அவற்றை உயர்வாகக் கருதினார்கள். அபரவித்தியாக்கள் என அழைக்கப்பெற்ற இவர்கட்குப் **பூசாரிகளாகிய பார்ப்பனர்கள் தாம் தலைவர்களாவர்.** (2) கங்கைச் சமவெளியில் குடியேறியிருந்த ஆதி ஆரியர்கள் பிராகிருதத்திற்கு நேரான ஒரு வழக்கு மொழியைப் பேசினார்கள். வைதிக யாகங்களையும் ஆடம்பரமான சடங்கு

களையும் வெறுத்து ஒதுக்கி ஆத்மவித்யா அல்லது 'பரவித்யா' எனப் பெயர்கொண்ட ஒரு புதிய தத்துவக் கோட்பாட்டை மக்களிடைப் புகுத்தினார்கள். வீரராகிய க்ஷத்திரியர்களே இப்புதிய கருத்தினைத் தோற்றுவித்துப் பாதுகாத்தமையான், பரவித்யாக்களுக்கு அவர்களே தலைவராயிருந்தனர்.

ஒன்றோடொன்று போட்டியிட்ட இவ்விரு கொள்கைகளும் மிகப் பழையகாலமுதல் நிலவி வந்தனவாகத் தெரியவருகின்றது. அவற்றினிடையே நாளடைவில் பிளவு மிகுதியாகி ஒன்றோடொன்று எளிதில் சமாதானப்படுத்த இயலாதாயிற்று. ஆனால் இந்திய நாட்டின் நல்லொழுக்கேற்பப் புதிய கோட்பாடு அதிக செல்வாக்கையும் அன்பர்களையும் பெற்று ஓங்கியது. இதைக்கண்ட குருபாஞ்சால ஆரியர்கள் தங்களது எதிரிகளும் கிழைச் சகோதரர்களும் ஆகியோரோடு சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளக் காலம் நீடிக்கக்கூடாது என்று முடிவு செய்தனர். எனவே அக்காலத்தில் கடுமையான ஆழ்ந்த வாதங்களும் ஆராய்ச்சிகளும் ஒருவரோடொருவர் கலந்துபேசிக் கருத்தினைத் தெரிந்துகொள்ளுதலுமாகிய நிகழ்ச்சிகள் எங்கும் நடந்தன. முடிவில் குருபாஞ்சாலர்களும் அவர்களது பூசாரிகளும் சடங்கு முறைகளைக் கைவிட்டு அரச அவைகளில் குழுமி, நான் முன்னே குறித்த புதிய ஆச்சரியமான முறையைப் பின்பற்றலாயினர். ஆகையினால் படிப்படியாகச் சமாதானம் ஏற்பட்டு அஹிம்சைக் கொள்கை வைதீக ஆரியர்களால் ஏற்றுக்கொள்ளப் பெற்றது.

அதனுற்றுன் பின்னைய பிராமணர்களில் யாகஞ் செய்யுங்கால் உயிர்க்கொலையைக் கூறுது, **பண்ணியங்களை மாவினுல் செய்த பண்ணிகாரங்ளால் நிவேதனம் செய்யலாமென்றும், அதனுல் எவ்விதமான தத்துவக் குறைபாடோ பயனின்மையோ ஏற்படாதென்றும் சொல்லப்பட்டு**ள்ளது. ஒருவருக்கொருவர் சம்மதித்து ஒன்றுபடுதற்கேற்ற விருப்பத்தினை இச்செய்தி குறிக்கலாம். ஆனுல் ஆதி ஆரியர்களுள் தீகத்தீவிரமான எண்ணங்கொண்ட சிலர், இந்த உடன்பாட்டினை ஏற்றுக்கொள்ளாது புறத்தே யிருக்கவேண்டும். இவர்கள் தான் பிற்காலத்தில் தோன்றிய புத்தமதக் கொள்கைக்கு விதையிட்டவராவர். நடுவிலிருந்த செல்வாக்குமிக்க கூட்டம் ஆதிசைனர்கள் ஆவர்.

## 6. புத்தாவதாரம் கற்பித்தல்

புத்தமத வரலாற்றைப்பற்றி இப்போது நான் அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. மகாவீர வர்த்தமானரின் காலத்து வாழ்ந்த அவரினும் இளைஞரான கௌதம சாக்கியமுனி, அம்மதத்தைத் தோற்றுவித்தா ரென்பதை எல்லோரும் அறிவீர்கள். அவர் தோன்றிய க்ஷத்திரியகுல சாக்கியக் குடியினர், தாங்கள் இக்ஷ்வாகு பரம்பரையைச் சார்ந்தவரெனச் செருக்குடன் கூறிக்கொண்டனர். சமண சமயத்தைப் போல் வேதத்தை மறுத்துச் சாதிப் பாகுபாட்டை முற்றிலும் வெறுத்து, உலக சகோதரத்வத்துவத்தையும்

அஹிம்சைக் கொள்கையையும் பரப்பியதால், அரச குடும்பத்தினரும் நாகரீக முடையவரும் பௌத்தத்தை ஆதரித்தனர். ஆனால் அது **அநித்தியத்தையும் அநாத்ம வாதத்தையும்** பரப்பியதால் இருமதத்தாரிடையும் ஒற்றுமையேற்பட இயலாதாயிற்று. அதனாற்றான் அம்மதம் இந்துமதத்தின் எதிரியென்று கருதப்பெற்றது. இறுதியில் சங்கரராலும் அது அறவே அழித்து ஒதுக்கப்பெற்றது. எனினும் புத்த பகவானது தோற்றம் மிகமேன்மை வாய்ந்ததாய் இருந்தமையான், இந்துக்கள் அவரை அவதார மாக்கினர். இங்ஙனமே இவ்விஷ்ணுவின் அவதாரங்களைப்பற்றிய பரம்பரை வரலாறுகள்கூட தோன்றுவதற்குப் பன்னெடுநாட்களுக்கு முன்னேயே வாழ்ந்து சமயப்பணி புரிந்துவந்த ஆதி தீர்த்தங்கரராகிய விருஷப தேவரையும் இந்துக்கள் அவதார மாக்கி விட்டனர்.

## 7. பௌத்தம் சமணத்துக்குப் பிந்தியது

புத்த தேவரது காலத்திலேயே சமணசமயம் செவ்வையாக நிறுவப்பெற்று, மக்களிற் பெரும்பாலோரால் பின்பற்றப் பட்டதெனத் தெரிகின்றது. ஏனென்றால் புத்தரே சிலகாலம் திகம்பர சமண சந்நியாசியாகவிருந்து சமணத் துறவொழுக்க முறைகளாகிய நிலத்திடைக்கிடத்தல், பட்டினி நோன்பு மேற்கொள்ளல், பிறர்கையிலிருந்து கவளம் வாங்கியுண்டல் முதலியவைகளை மேற்கொண்டார் என்று புத்தமத

நூல்களே கூறுகின்றன. நாளடைவில் இத்தகைய துறவி நோன்பைச் செயலில் பின்பற்றவும் மிகக் கடுமையானது என்பதை உணர்ந்து, துன்பத்தைப் பொறுக்கமுடியாத நிலையில் சமணத் துறவொழுக்கத் திற்கும் ஒழுக்கக் குறைபாடுடைய மற்றைய சந்நி யாச முறைக்கும் இடைப்பட்ட மத்திய மார்க்கத் தைப் பின்பற்றி, அதனைப் பரப்பவும் தொடங்கினார். தன்னுடைய தோழனும் மாணவனுமாகிய சாரிப் புத்தனுக்கு இதை விளக்கிச் சொல்லியிருப்பதிலிருந்து அவரது ஆதித்துறவு நிலையின் விரிவான வரலாறு அறியக்கிடக்கின்றது. இதிலிருந்து பௌத்தம் சமணத்திற்குப் பிற்காலத்தே தோன்றியதென்பதை அறிகின்றோம்.

## 8. சைவமே சமணத்தின் பகுதியா?

இவ்வரலாற்றுப் பகுதியை முடிக்குமுன் தென்னிந்தியத் தொடர்புடைய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சில முக்கியமான செய்திகளைப்பற்றிக் கூறுவாம். தேவாரப் பதிகங்களில் போற்றப்பெறும் சிவன் அல்லது காபாலேசுவரனாகிய ருத்திரனை வழி படுவதில் இக்காலத்துச் சைவசமயம் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. எனினும் சைவர்கள் ஆதிசைவத்தைப் பற்றிப் பேசுகின்றனர். அன்பு, கருணை ஆகியவற்றின் உருவமே சிவம் என்று ஆதி சைவத்திற் கருதப்படுகின்றது. இக்காலத்துக் காபாலேசுவர வழிபாடு தோன்றுவதற்குமுன்,

இதற்கு முற்றிலும் மாறுபட்ட பிறிதொரு வகையான சமயக்கொள்கை இருந்திருத்தல் வேண்டும். தென்னிந்தியாவில் பரவியிருந்ததாகச் சொல்லப் பெறும் ஆதிசைவம் அஹிம்சாப் பிரசாரம் செய்து வந்த விருஷப தேவரின் கொள்கையைத்தவிர வேறில்லையென்று உறுதியாக நான் நம்புகின்றேன். நம்முடைய அனுமானத்திற்கு உதவியாகச் சில சுவை மிக்க செய்திகள் கிடைத்துள்ளன. விருஷபதேவர் நிர்வாணமடைந்தவிடம் கைலாயமலையாகும். அவர் மகன் பரதன் அம்மலையில் ஒரு கோயில்கட்டி விருஷப தேவரைச் சிலையில் பிரதிஷ்டை செய்தான். விருஷப தேவரின் பரிநிர்வாணத்தால் தூய்மையும் உயர்வையும் உற்ற இவ்விடம், சைவர்களால் தெய்வத்தன்மை பொருந்தியதாகக் கருதப்பெறுகின்றது. ஏனெனில் சிவபெருமான் அங்குத் தங்கியிருப்பதாகவும் கருது கின்றனர். விருஷபதேவரின் பரிநிர்வாண நாளாகிய சிவராத்திரி, சைவர்களால் முக்கிய சமயவிழாவாகக் கொண்டாடப்பெறுகின்றது. விருஷபதேவரின் சிலையின் பீடத்தில் அடையாளத்திற்காகப் பொறிக்கப் பெறும் காளை, சிவபெருமானின் உருவத்திற்கு வாகனமாக மாற்றப்பெற்றுவிட்டது. விருஷப தேவரது முக்கியமான பெயர்களுள் * சத்தியோஜாதன்

* போதின்மிசைப் பிறந்திருந்து நடந்து பின்னும்,
புலவர்மனப் போது தொறும புரிந்து வாழும்
ஆதிமுதற் கடவுளுக்குக் குணப் பேர் தூய
வாயிரத் தெட்டுடையவர்க் கைந்துளவா மென்ப
கோதில் புகழ் சத்தியோ சாதனன் வாமன்
கோரனீ சானன்றற் புருடனென்று
சாதமுதற் கலியாண மைந்தின் வானோர்
தாமன் பர்லிட்ட திருநாமந்தானே.

"திருக்கலம்பகம்"

அகோரன், ஈசானன், தத்புருஷன் போன்ற பல பெயர்கள் ஹிந்து புராணங்களில் சிவபெருமானுக்குக் கூறப்பெற்றுள்ளன. உலகப் பொருள்களின் மேலுள் ளப்பற்றினை முற்றத்துறந்து ஆடையின்றித திகம்பர முனிவராகத் திரிந்தமையால் விருஷபதேவர் திகம் பரர் என்று அழைக்கப் பெற்றார். இப்பெயர் சிவ பெருமானுக்கும் கூறப்படுகின்றது. இச்செய்தியும் வெளிப்படையான ஒற்றுமையைக் காட்டுகின்றது. வீடு பெறுதலின் வழிக்குச் சிவமார்க்கமென்றும் மோக்ஷத்திற்குச்சி வகதியென்றும் பெயராகும். இந்து சமண தெய்வீக நூற்களை நோக்குங்கால் வியக்கத் தக்கதொரு உண்மையைக்காண்கின்றோம். மகாதேவர் சிவம், சிவரூபம், சிவகதி முதலிய சொற்கள் முதலில் விருஷப தேவரோடு இயைபுற்றுப் பின்னர் பிற்காலச் சைவத்தின் தெய்வமாகிய வேதங்களிற் கூறியுள்ள ருத்திரனுக்கு ஏற்படுகின்றன. எனவே விருஷப தேவர்தான் மூலமான சிவனென்றும், ஆதி சைவமும் சமணமும் ஒன்றன்றி, இரண்டு மதங்கள் அல்ல என்பதும் பெறப்படும்.

## 9. காபாலிக மதத்தோற்றம்

இக்காலத்தே சிவபெருமான் கழுத்தைச் சுற்றி மண்டையோட்டு மாலை யணிந்திருப்பதாகவும், இடை யில் புலித்தோல் ஆடையையும்,கையில் பிச்சையேற்க ஒரு கபாலத்தையும் திரிசூலத்தையும் வைத்திருப் பதாகவும் வருணிக்கப்பெறுகின்றார். இந்து மதப்

புனருத்தாரண காலத்தில் காபாலிக மதம் தென்னிந்தியாவில் புகுத்தப்பட்டதே இவ்வருணைக்குக் காரணமாகும். இந்தக் காபாலிக மதம் பிகப்பழமையான அஹிம்சைச் சைவத்தை அறவே யொழித்து விட்டது. மிகத்தெளிவாகப் பிறரறிந்து இகழக்கூடிய கீழ்த்தரமான மதக்கொள்கையை நாட்டிலே பரப்பிற்று. தங்களைப்போன்று மனைவி மக்களும் உணவும் கொள்ளக்கூடிய இரு பெரிய வீரனைப் போன்றக் கடவுளைப் பொதுமக்கள் விரும்பினர். அவர்களது விருப்பத்தைப் பூர்த்திசெய்யும் முறையில் காபாலிகர்கள் இரு தெய்வத்தை ஏற்படுத்தினார்கள்.

## 10. சிருஷ்டி வரலாறு - ஒருவியவகார கற்பனை

இனி இச்சமயங்களின் தத்துவங்களை நோக்குவோம். வேதங்களின் உயர்வை ஏற்றுக்கொள்ளாமையால் சமணம், புத்தம், சார்வாகமுறை ஆகிய மூன்றும் வேதமல்லா நெறிகள் என அழைக்கப் பெறும். அக்காரணம் பற்றியே நாஸ்திகக் கருத்துடையக் கூட்டம் என்று தாழ்வாகக் கூறப்பெறுகின்றன. இது தவறானதென்று நான் உரைக்கின்றேன். ஆத்மா, மோக்ஷம், மோக்ஷமார்க்கம் ஆகியவைகளை நம்பாமையே நாஸ்திகமாகும் என்று எல்லோரும் ஒப்புக்கொள்வர். இவ்விலக்கணத்தை அளவு கோலாகக் கொண்டால், சார்வாகமுறை ஒன்றுமட்டும் நாஸ்திகத்திற்குட்படும். இந்திய நாட்டிலுள்ள சமணத்தையும் மற்றையர் சமயங்களை

யும் ஒருவர் ஆழ்ந்து கற்ருராயின் இச்சமயங்களின் அடிப்படையில் ஒரு முக்கியமான பொருத்தன்மை அமைந்து கிடப்பதைக் காண்பார்கள். இந்தியத் தத்துவ முறை எதுவும் சிருஷ்டிக் கொள்கையை ஒப்புக்கொள்ளவில்லை என்பதை நான் முழு நம்பிக் கையுடனும் சான்றுகளுடனும் கூறுவேன். சிருஷ்டிக் கொள்கையைக் கபிலர் வெளிப்படையாக இழித்துக் கூறி அக்கொள்கையைத் தத்துவமாகக் கொள்ள முடியாது; கொண்டாலும் வாதத்திற்கு நில்லாது என்றும் கூறுகின்ருர். ஈஸ்வரன் சிருஷ்டிகருத்தன் அல்லன் என்றும், மற்றையப் புருஷர்களுக்கு ஒரு அறவழிகாட்டியே யாவன் என்றும் பதஞ்சலி கூறு கின்ருர். சிருஷ்டிக் கொள்கையை வேதாந்தம் ஏற்றுக்கொள்ளவில்லை. வேதத்தில் சொல்லப்பெற் றிருக்கும் சிருஷ்டி வரலாறு ஒரு வியவகார கற்பனை யென்று சங்கரர் அதனை முற்றிலும் உதறித் தள்ளு கின்ருர். இங்ஙனமே மீமாம்சமும் இக்கொள்கையை மறுக்கின்றது. சிருஷ்டி இயலும் என்பதையோ, சிருஷ்டி கருத்தர் ஒருவர் இருக்கின்ருர் என் பதையோ மீமாம்சம் ஒப்புக்கொள்ளவில்லை.

## 11. இன்ப துன்பங்களுக்குக் காரணம் அவரவர் கர்மமே

சிருஷ்டிக் கொள்கையைத் தருக்கமுறைப்படி மிக வன்மையாகக் கண்டிப்பது மீமாம்சமுறையே யாகும். இந்து தரிசனங்களுள் இதுவே பழைய

சாஸ்திரங்களை விடாது பின்பற்றுவது. வேதங்களின் உயர்வையும் ஆணையையும் வற்புறுத்திப்பேசுகின்றது. வேதங்கள் நித்தியமென்றும் அபௌருஷேயம் என்றும் மீமாம்சைகள் கூறுகின்றன, வைதிக தரிசனங்களுள் முதற் பார்வையில் நியாயம் வைசேஷிகம் ஆகிய இரு பகுதிகளே சிருஷ்டிக்கொள்கையை ஒப்புவதுபோல் தோன்றுகின்றன. இங்கும் முடிவான கொள்கைகளாகிய அணுக்கள் ஆத்மாக்கள் ஆகியவை நித்தியமாகவும் சிருஷ்டிக்கப்படாதனவாகவும் கொள்ளப்பெறுகின்றன. ஒவ்வொரு சீவன் அல்லது ஆத்மாவின் உயர்வு தாழ்வுக்கு ஏற்ற ஓர் உடலைக் கட்டித்தருவதோடு சிருஷ்டிப்பவனின் வேலை முடிவுபெறுவதாகச் சொல்லப்படுகின்றது. வைதிக தரிசனங்களில் அமைந்து கிடப்பதைவிட சைனக்கருத்து மிக அதிகமாக ஒன்றும் கூறவில்லை. சிருஷ்டிக்கொள்கையை மறுக்கும் ஒரு சிறுகாரணத்திற்காக நாஸ்திகம் என்று சமணம் 'பெயரிடப்பெற்றால், அதே நியாயத்தினுல் ஒவ்வொரு இந்து வைதிக தரிசனத்திற்கும் அப்பெயர் பொருந்தும். ஆஸ்திக தரிஸனத்தின் குறிக்கோள் மூன்று அடிப்படைக் கருத்துக்களைக் கொண்டதாகும். ஆறு இந்து தரிஸனங்களிலும் சமண தரிஸனத்திலும் அவை காணப்பெறுகின்றன. அவையாவன (1) உபாதிகளோடு கூடிய ஆத்மா. (2) உபாதிகளின் நீங்கிய ஆத்மா. (3) தூய தன்னிலையை அடைதற்குரிய வழி. ஆத்மா, மோக்ஷம், மோக்ஷமார்க்கம் எனப்பெயர் பெறுவதும் அதுவேயாகும். தனிப்பட்ட வாழ்க்கை அல்லது

ஆத்மாவின் உண்மை சமண தரிசனத்தில் ஏற்புறுத்தப் பெறுகின்றது. மற்றைய இந்து தரிசனங்களிலும் இதனைப்பார்க்கின்றோம். ஆனால் சங்கரரது அத்வைதம் இதனை ஏற்கவில்லை. ஆத்மாவைப் பற்றிய அத்வைதக் கருத்திலும் தனிப்பட்ட வாழ்க்கையை ஒப்புக்கொள்ளும் நிலையுள்ளது. ஒரு முக்கியமான வேதாந்த சூத்திரத்திற்கு சங்கரர் எழுதிய அகலவுரையில் இதற்கு ஆதாரம் கிடைக்கின்றது. அவ்வுரையில் ஒரு பூர்வபக்ஷத்திற்கு மறுமொழி கூறுங்கால் தனிமனிதனின் இன்ப அனுபவங்களில் வேற்றுமைகள் இருப்பதற்குக் காரணம், முற்றிலும் அவரவர் கருமங்களே ஆகுமென்று கூறுகின்றார்.

## 12. சமண சமயத்தில் மோக்ஷம்

சமண சமயத்தின்படி இப்பிரபஞ்சமும் நித்தியமானது. காலப்போக்கில் பலவிதமான மாறுதல்களை அடைந்து கொண்டிருக்கும். முடிவில்லாத எண்ணிக்கையுள்ள ஆன்மாக்கள், தாந்தாம் இயற்றிய கர்மாக்களுக்கு ஏற்பப் பலவகையான உருவங்களைக் கொண்டு வாழ்கின்றன. ஜீவனுக்குத் தெய்வீக வன்மையுண்டு. ஆனால் அதனுடைய தெய்வீகப் பண்புகளுக்கு ஒரு எல்லையுண்டு. அல்லது இந்தக் கர்மங்களினால் அவை தடைப்படுகின்றன. சமணமதம் கூறும் கர்மாவைப்பற்றிய கருத்து தத்துவ சாஸ்திரத்திற்குச் சிறந்த முக்கியமான கொடையாகும். ஒருவன் ஒன்றைச் செய்ய எண்ணுங்கால் அவன் மாட்டு

பாஹிய கருமமிருக்கின்றது. அவன் செயலாற்றுங் கால் அவனிடத்தில் திரவிய கருமம் உண்டாக்கப் படுகின்றது. குரோதம், மானம், மாயை அல்லது லோபம் முதலியவைகளால் ஆன்மா ஒருவேலையைச் செய்யுங்கால் அதனைக்கட்டுகின்ற இடைவெளியில் **கர்ம வர்க்கனங்கள்** என்ற மிக நுண்ணிய பொருள்கள் இருப்பதாகச் சமண தத்துவ வல்லார் நம்புகின்றனர். ஒருவன் செயலையாற்றினாலும் மற்ற வனைச் செய்யும்படித் தூண்டினாலும் மற்றவன் செய்ததை யொப்பினாலும் இந்தக் கர்ம நுண்பொருள்கள் ஆத்மாவைப் பந்தத்திற்குட்படுத்துகின்றன. இந்தக் கர்மங்களே கர்மத்தொகுதியில் சேர்கின்றன. ஆத்மா பலவிதமான மாறுபாடடைந்து பிறவிதோறும் செல்லுங்காலமெல்லாம் விடாது தொடர்ந்து சென்று பாராட்டத்தக்கப் பல முடிவுகளை உண்டாக்குகின்றன. முடிவாக அக்கர்மத்தொகுதி அழிக்கப்பெற்று முடிவில் ஒதுக்கித் தள்ளப்பெறுகின்றது. அப்போது தான் மோக்ஷம் அல்லது முடிந்த நன்னிலையை ஆத்மா அடைகின்றது.

## 13. கடவுள் அவதாரஞ் செய்வதில்லை

ஒரு ஆத்மா எல்லாக் கருமங்களினின்றும் விடுதலையடையுங்காலத்தே தான் அது முழு தெய்வத் தன்மையை அடைகின்றது; பரமாத்மாவாக ஆகிறது. வரம்பிலா ஒளி, ஆற்றல் முதலியவற்றைப்பெற்று மகிழத் தொடங்குகின்றது. கடவுள் அல்லது பர

மாத்மாவைப் பற்றிய கருத்து, சமணத்தில் இங்ஙனம் அமைந்து கிடக்கின்றது.* சீவாத்மாவும் பரமாத்மாவும் முடிவில் ஒன்றுதான் என்று நிறுவுவதில் சங்கரரும் சமண சமயமும் ஒரு நிலையில் இருப்பினும், சமணம் கூறும் முடிவிலாப் பண்புகள் நிறைந்த பரமாத்மா சங்கரருடைய நிர்க்குண பிரமத்தினின்றும் மாறுபடுவதைக் காணலாம். ஆனால் முடிவிலாத குணங்கள் நிறைந்த கடவுளைப்பற்றி, இராமானுஜர் பேசுவதால் அவர் சமண முறையோடு உளம் ஒன்றுபடுகின்றார். விடுதலைபெற்ற இந்த ஆத்மா மீண்டு இங்கு வந்து இம்மாய உலகில் சஞ்சரிப்பதில்லை. சரியான நன்னிலையடைந்த ஒரு ஆன்மா நிலைதவறுதல் இயலாது. எனவே தான் குருதியும் தசையுங்கொண்ட உடலெடுத்து இவ்வுலகில் கடவுள் பிறக்கின்றார் என்ற அவதாரக்கருத்தினைச் சமணர்கள் ஒப்புக்கொள்வதில்லை. மோக்ஷ வாழ்க்கை அல்லது நிர்வாணம் ஒரு தொடக்கத்தைக் கொண்டுள்ளது. ஆனால் இறுதியில்லை. நன்னிலையில்லா ஆத்மாவின் மண்ணுலக வாழ்வின் தோற்றம் அறிய இயலாவிடினும், அதற்கொரு முடிவுண்டு என்று கூறக்கூடும்.

## 14. ஆத்தும விடுதலை

சமண சமயத்தின்படி வீடுபேற்றின் வழியாகிய மோக்ஷமார்க்கம் நன்னம்பிக்கை, நல்லறிவு, நல்லொழுக்கம் என மூன்று பிரிவுகளைக்கொண்டுளது. இவை சம்யக் தர்சனம், சம்யக்ஞானம், சம்யக்சாரித்

திரம் எனப் பெயர்பெறும். நன்னம்பிக்கை யென்பது தத்துவங்களின் உண்மையை உள்ளபடி நம்புவதாகும். இந்த உண்மைகளின் தன்மைகளைத் திரிபின்றித் தெரிந்துகொள்ளுதலே நல்லறிவு எனப்படும். சமயப்புத்தகங்களில் விதித்துள்ள ஒழுக்கக் கோட்பாடுகளின்படி வாழ்வது நல்லொழுக்கம் என வருணிக்கப்பட்டுளது. இவ்வொழுக்கம் இருவகைத்தாம். இல்லறத்தான் அல்லது பொதுமகனுக்கு ஒன்று; விரதி அல்லது முனிவனுக்கு மற்றொன்று. பொதுமகன் நடத்திக்காட்டவேண்டிய சமய உறுதிமொழிகள் சிறிய உறுதிகள் அல்லது அணுவிரதங்கள் எனப்பெறும். துறவிகளுடையவை பெரிய உறுதிகள் அல்லது மகாவிரதங்கள் எனப்பெயர் பெறும். இவ்வுறுதிகளெல்லாம் அஹிம்சையாகிய பெரிய கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அஹிம்சையைக் கட்டுப்பாடாக மேற்கொள்வதில் ஒவ்வொரு உறுதியும் அடங்கியிருக்கவேண்டும். உலகவாழ்க்கையில் ஈடுபட்டுப் பல கடமைகளை ஆற்றவேண்டிய பொதுமகனைப் பொறுத்தமட்டில், அஹிம்சை விரதத்திற்கு ஒரு எல்லையுண்டு. உதாரணமாக அவன் தாவரங்களைப் பயன்படுத்தலாம். எவ்வளவு வேண்டற்பாலதோ அதற்குமேலும் பயன்படுத்தலாகாது. இரண்டும் அதற்கு மேற்பட்ட உணர்ச்சிகளையுமுடைய இயங்கு பொருள்களில் எதனையும் அவன் கொல்லலாகாது என விலக்கப்பெறுகின்றான். துறவிகளைப் பொறுத்தமட்டில் எத்தகைய வழுவுமின்றிக் கட்டுப்பாடாக எல்லா விரதங்களும் முற்றிலும் பின்பற்றப்படவேண்டும்.

வீடுபேற்றிற்கு நம்பிக்கை மட்டிலும் போதுமானது என்று சில முறைகள் கூறுகின்றன. தெய்வீக விடுதலைக்கு அறிவுமட்டிலும் போதும் என்கின்றன வேறுசில. இன்னும் சில உலக வாழ்க்கையில் இருக்கின்ற பலவிதமான ஆரவாரத் துன்பங்களிலிருந்து ஆன்மாவை விடுதலைபெறச் செய்யவல்லது நல்லொழுக்கமே என்று நம்புகின்றன. ஆனால் இந்த மூன்றும் ஒன்றற்கொன்று ஏற்றத் தாழ்வின்றிச் சமமான முறையில் ஆத்ம விடுதலைக்கு உதவுகின்றன என்று சமணம் வற்புறுத்துகின்றது.

## 15. சமணத்திலும், பிராமணீயத்திலுமுள்ள சடங்கு ஒற்றுமை

சடங்குகளைப் பொறுத்தவரையில் புத்தமதத்தில் ஒன்றுமே கிடையாது. சமணத்தில் பிராமணீயத்திற்கு எத்துணைச் சடங்குகளுண்டோ அத்துணையும் அதற்கு மேலும் இருக்கின்றன. ஒரு வைதீகப் பார்ப்பானது வாழ்க்கையில் நடக்கவேண்டிய உபநயனம், மணம் முதலிய பதினாறு சம்ஸ்காரங்களும் சமணத்தில் இருக்கின்றன. சமணச் சிறுவர்களும், சிறுமிகளும் உபநயன சம்ஸ்காரத்தின் மூலம் இல்லறத்தானின் சமய வாழ்வில் புகுத்தப்பெறுகின்றனர். அப்பொழுது அவர்களுக்குச் சமணர்களின் மகா மந்திரம் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. காயத்திரியும் சந்தியாவந்தனமும் பையன்களுக்கு அதிகமாகப் போதிக்கப்படுகின்றன. இந்துக் கோயில்களில் நடப்

பதைவிட விரிவான முறையில் சமணக் கோயில் களில் சடங்குகள் நடத்தப்பெறுகின்றன. இவ்விடத் தில் ஹோமத்தைப்பற்றி ஒரு சிறிது சொல்லவேண்டி யுள்ளது. ஹோமம் அல்லது நெருப்பு அர்ப்பணம் சமண இல்லறத்தார் வாழ்வில் மிக முக்கியமானது. எந்தச் சடங்கும் ஹோமமின்றி நடைபெருது. 'சமண ரல்லாத அறிஞர் சிலர், சமணத்திற்கும் ஹோமத் திற்கும் தொடர்பில்லையென்று கருதுகின்றனர். ஆகையால் ஹோமத்தின் முக்கியத்துவத்தை வற்பு றுத்திக் கூற விரும்புகின்றேன். உதாரணமாக எங்கே னும் கலியாண ஹோமத்தைப்பற்றி வருணிக்கப் பெற்றிருந்தால், உடனே அக்கலியாணத்தில் ஈடுபட் டுள்ள இருசாராரும் சமணராக இருக்கமுடியாது என்று முடிவுசெய்கின்றனர். இத்தகைய முடிவு உண்மைச் செய்திகளை அறியாமல் எழுவதாகும். இக் காலத்திலுங்கூட ஒரு சமணரது வீட்டில் நடை பெறும் சடங்கைக் காண்போமாளுல் மிக விரிவான முறையில் எல்லா நிகழ்ச்சிகளுடனும் கலியாண ஹோமம் நடைபெறுவதைக் காணலாம். சமித்துக் களைக்கொண்டு நெருப்புண்டாக்குதல் நன்ருக உருக் கிய நெய், பால், நெற்பொறி முதலியவற்றை நெருப் பில் சொரிதல், இந்திரன் வாயு வருணன் அக்கினி முதலிய கடவுளர்களை ஆவிர்ப்பித்தல் ஆகிய எல்லாச் சடங்குகளும் நடைபெறும். இத்தெய்வங்கள் திக்குப் பாலகர்களாக இங்கு விளங்குகின்றனர். உண்மை என்னவென்ருல், சமணம் ஒதுக்கித் தள்ளுவது உயிர்ப்பலி நிரம்பிய வைதிக அர்ப்பணம் ஆகிய யாகத் தையே யன்றி, நெருப்பு அர்ப்பணம் ஆகிய ஹோமம் முதலியவற்றையல்ல.

# 16. சமணசமயமே மூடப்பழக்க வழக்கங்களைக் கண்டித்த முதற்சமயம்

இந்த வேறுபாட்டைத் தெளிவுபடுத்துவதற்காகத் தான் தமிழ் இலக்கியத்தில் ஹோமத்தைக் குறிக்க வேள்வியென்ற சொல்லும், யாகத்தைக் குறிக்க, வேதவேள்வி யென்ற சொல்லும் பயில்கின்றன. பின்னர்க் கூறப்பெற்ற வேதவேள்வியைத் தான் சிரமணர்கள் மறுத்தார்கள். அதற்காக அவர்கள் நாடுகடத்தப்பெற்று நாசமாகப் பெற்றார்கள். இச்செய்தி * தேவாரப்பாடல்களிலிருந்து வெளியாகின்றது. மிகக்கடூரமான தண்டனைக்கும் நாடுகடத்தற்கும் வெறுப்பிற்கும் உட்பட்டிருந்தும், சமண சமயம் இந்து சமயத்தோடு சமமாக வாழ்வதற்கு இயலுகிறதென்றால் அதற்குக்காரணம் சமணத்தினுடைய சடங்குப் பகுதியே யாகும் என்று நான் நம்புகின்றேன். ஆத்மாவை மறுத்து அநாத்ம வாதத்தை உபதேசித்துப் பரப்பினமையால் புத்த மதத்தை எதிர்ப்பதற்காக ஹிந்துக்களும் சமணர்

---

* "வேத வேள்வியை நிந்தனை செய்தவர்"

"வேட்டு வேள்வி செய்யா முறட்டமண்குண்டர்"

"வைதிகத்தின் வழியொழுகாதவர்"

"அந்தணாளர் புரியும் அருமறை சிந்தை செய்யா அருகர்"—சம்பந்தர் தேவாரம்

களும் ஒன்றுகூடினர். ஆனால் வேதத்தைப் புத்தர் களும் சமணர்களும் ஒப்புக்கொள்ளாமையினால் அவ் விருசமயத்தாரையும் ஹிந்துக்கள் வெறுத்தனர். இந்துமதப் புனருத்தாரணர்கள், அவ்விரண்டு சமயங் களையும் முற்றிலும் அழித்துவிட மிக முயன்றும் இன்றுவரை சமணம் மாத்திரம் பாரதநாட்டில் நின்று நிலவுகின்றது. இதற்குக் காரணம் சம ணச் சடங்குகள் பிராமணீயச் சடங்குகளோடு பெரி தும் ஒத்திருந்ததேயாகும். இவ்வாறு சடங்குமுறை யில் ஒற்றுமை யிருந்தாலும், பகுத்தறிவிற்கு ஒப்பாத புராண இந்துமதத்தை அது எதிர்த்தது. அதனுடைய சமாதானப்படுத்தமுடியாத பகுத்தறிவு முறையைக் கண்டு, இந்துக்கள் சமணத்தை ஆதரவாகப் பாராட்டு வதில்லை. சமணக் கொள்கைளும் உபதேசங்களும் தர்க்க முறைப்படி அமைக்கப் பெற்றுள்ளன. கார ணங்காட்டி நிரூபிக்க முடியாத எதனையும் ஒப்புக் கொள்ளுதல் தவறாகும் என்று சமண அறிஞர்கள் எப்பொழுதும் எச்சரிக்கின்றனர். பாவங்களைப் போக் கிக்கொள்வதற்காக ஆறு அல்லது கடலில் குளித்தல்; தொத்துநோய் வாராதபடி தடுத்தற்கும், செல்வம், உயர்வு, குழந்தைகள் முதலியன பெறுதற்கும் ஈடாக, ஆண் தெய்வங்கட்கும் பெண் தெய்வங்கட்கும் உயிர்ப் பலி கொடுத்தல்; சாதுக்களென்று அழைக்கப்பெறு பவர்களை அவர்களது வெளித்தோற்றம், தந்திரம், வஞ்சகச் சொற்கள் முதலியவற்றால் ஏமாந்து அவர் களை வணங்கி ஏவல் செய்தல் ஆகிய மூடப்பழக்க வழக்கங்களைச் சமணம் மிகவன்மையாகக் கண்டிக் கிறது.

# 17. சாதிப்பாகுபாட்டுக்குப் பிறப்புக்காரணமல்ல- பிராமணீயம் தோன்றிய வரலாறு

சமண வரலாறு கூறுகிறபடி பிராமணக்குடியின் சிருஷ்டியைப்பற்றி நாம் சில வார்த்தைகள் சொல்லவேண்டும். பிறப்பை அடிப்படையாகக் கொண்டு சாதிப்பாகுபாடு செய்வதில் சமணம் நம்பிக்கைக் கொள்ளவில்லை யென்பதை முன்பே கூறியுள்ளேன். அரசியல், வாணிகம், தொண்டு என்ற மூன்று பிரிவில் மக்களுடைய வாழ்க்கைத் தொழிலைக் கொண்டு விருஷபதேவர் சாதி பிரித்தார் என்பதையுங் கூறியுள்ளேன். ஆனால் அவருடைய மகன் பரதச் சக்கரவர்த்தி அக்காலத்துத் தெரிந்திருந்த உலகம் முழுவதையும் வென்று அடிப்படுத்திய பிறகு, தனது தலைநகராகிய அயோத்திக்கு வந்த காலத்தில் சாதி நிலைமை மாறுபட்டது. மக்கட் சமுதாயம் பெரிய கலப்புற்றுக் குழப்பமடைந்திருந்தது. மக்களின் ஆத்மீக நலத்திற்குச் சம்பந்தமுடைய கடமைகளை யெல்லாம் அத்துறைக்கு வேண்டிய தகுதியையுடைய தேர்ந்தெடுக்கப்பெற்ற சிலரிடம் ஒப்படைக்க விரும்பினான். இதனைக் குறித்துத் தனது மந்திரிகளைக் கலந்து ஆலோசித்தான். ஆத்மீக உயர்வுற்றவர்களையும் அஹிம்சையைக் கட்டுப்பாடாகப் பின்பற்றுகிறவர்களையும் இக்காரியத்திற்குப் பயன்படுத்தலாமென்று சக்கரவர்த்திக்கு யோசனை கூறினார்கள். இத்தகையோரைத் தேர்ந்தெடுப்பதற்காகக் கீழ்க்

கண்ட முறை கையாளப்பெற்றது. ஒரு பெரிய விருந்திற்கு எல்லா மக்களையும் வரும்படி இராச்சியம் முழுவதிலும் சக்கரவர்த்தி பிரகடனம் விடுத்தார். குறிப்பிட்ட நாளன்று வைகறையில் கதவுகள் திறப்பதற்கு முன்பேயே அரண்மனையின் எல்லா வாயில்களிலும் முளையோடு கூடிய தானியங்களைத் தூவி வைக்குமாறு சக்கரவர்த்தி கட்டளையிட்டார். உள்ளே நுழைவதற்காக ஒருபெரிய கூட்டம் வெளியில் காத்திருந்தது. மணியடித்துக் கதவுகள் திறக்கப்பெற்றவுடன் எல்லா மக்களும் நெருக்கமாக உள் நுழைந்து விருந்திற்காக அமைக்கப்பெற்றிருந்த இடங்களில் அமர்ந்தனர். எல்லா மக்களும் உள்ளே வந்துவிட்டார்களா? என்று பரதர் கேட்டார். அநேகர் வெளியில் இருப்பதாகச் செய்தி கிடைத்தது. சில மந்திரிகளிடம் அவர்களைக் கூட்டி வருமாறு ஆணையிட்டார். ஆனால் வெளியிலிருந்த மக்கள் உள்ளே வர மறுத்துவிட்டனர். அரண்மனை வாயில்களில் சிதறுண்டிருக்கும் தானிய முளைகளைக் கட்டுப்பாடாக அஹிம்சையைப் பின்பற்றுகின்ற தாங்கள் மிதித்து நசுக்கக் கூடாதென்றும், ஓரறிவுயிராகிய தாவரங்கட்குக்கூடத் தாங்கள் துன்பஞ் செய்யக் கூடாது என்றும் காரணங் கூறினார்கள். இதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியுற்ற பரதர் வேறொரு வாயில் வழியாக அவர்களையழைத்து வருமாறு மந்திரிகளை ஏவினார். அவர்களுடைய சமயக் கொள்கைகளின் உயர்வுக்காகச் சக்கரவர்த்தி அவர்களை வணங்கி பிராமணர்களின் வேலையை அவர்களிடம் ஒப்படைத்தார். மக்களிடையே அஹிம்சாத் தத்துவத்தைப் பரப்பி

மக்களது ஆத்ம நலத்தைப் பேண வேண்டுவது அந்தப் பிராமணர்களது கடமையாயிற்று, இங்ஙனம் பிரமகுலம் தோன்றியதாகச் சமண சமயம் கூறுகின்றது, திருக்குறளாசிரியராகிய தெய்வப்புலமை வாய்ந்த திருவள்ளுவர்.

' அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல் ''—

என்ற ஒரு பாட்டிலேயே இச்செய்தியைப்பற்றித் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். இந்நாளிலும் சமணர்கள் சிறப்பாகத் தென்னாட்டிலுள்ளவர்கள், தங்களுடைய சமயச்சடங்குகளையும், கலியாணம் போன்ற சமுதாயச் சடங்குகளையும் அஹிம்சையை மேற்கொண்டுள்ள சமணராயிருக்கின்ற பிராமணப் புரோகிதர்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு நடத்துகின்றார்கள்.

## 18. உலகத்துக்குப் பௌத்தத்தினும் சமணமே கொல்லாமையைப் போதித்தது

இந்திய நாட்டின் பண்பாட்டு ஒற்றுமைக்குச் சமணமும் பௌத்தமும் மிக அதிகமாக வேலை செய்துள்ளன. சாதித் தடைகளையெல்லாம் உடைத்தெறிந்து ஒவ்வொரு விதமான சடங்குகளையும் உதறித்தள்ளிவிட்டுப் புத்தமதத்தைத் தழுவும்படி வேறுபாடின்றி எல்லா மக்களையும் எதிர்கொண்டழைத்தது. இத்தகைய விரிவான மனப்பாங்கு இந்தி

யாவில் மட்டுமின்றி, ஆசியாவின் மற்றையப் பகுதி களிலும் விரிவாகவும் விரைவாகவும் புத்தமதம் பரவு வதற்குக் காரணமாயிருந்திருக்கலாம். ஆனால் நான் முன்பே குறித்துள்ளபடி, அம்மதத்தின் அநாத்மவாத தத்துவமே இந்நாட்டில் அது மறைந்ததற்கு மூல காரணமாகும். சமணத்தைப் போலவே அஹிம் சையை அம்மதமும் போதித்தது. ஆனால் அதனுடைய அஹிம்சைக் கொள்கை குறைபாடுடையது. பேச்சள வில்தான் அஹிம்சை நிலவியது. தன்னைப் பின்பற்று வோரைத் தசையும் மீனும் உண்பதற்கு அனுமதித் துள்ளது. புத்த பிக்ஷுக்களும் தாராளமாகப் புலா லுண்டார்களெனின், புத்தமத அஹிம்சையை என் னென்பேன். ஆனால் சமணத்தில் இந்நிலைமை கிடை யாது. இல்லறத்தானாயினும் துறவியாயினும் ஒவ் வொரு சமணனும் எத்தகைய தசையையும் தின்பதி லிருந்து தடுக்கப்படுகின்றான். உணவிற்காக ஒருயி ரைக் கொல்லுதலும் பாவம்; விலைக்கு வாங்குதலும் பாவம் என்று கூறியுள்ளனர். ஆனால் பௌத்தம் புலாலை விலைக்கு வாங்குதலைப் பாவமாகக் கருத வில்லை. இந்தக் கருத்து, சமணர்களால் ஒப்புக் கொள்ளப் பெறவில்லையென்பதும், அவர்கள் உள்ளம் இதை ஏற்கவில்லை யென்பதும்,

“ தினற்பொருட்டாற் கொள்ளா துலகெனின்,யாரும்

விலைப் பொருட்டால் ஊன் தருவா ரில் ”

—என்னும் திருக்குறளிலிருந்து தெரிகிறது.

# 19. இந்திய நற்பண்புக்குச் சமண பௌத்தம் செய்த உதவி

சமஸ்கிருத இலக்கியங்களிலிருந்து இடைக்காலத்துப் பிராமணர்கள், தசையுணவைப் பெரிதும் விரும்பினர் என்பது தெளிவாகின்றது. உத்தர இராம சரிதம் இதனை விளக்கிக் காட்டுகின்றது. இக்காலத்தில் தென்னிந்தியாவில் யக்ஞங்களில் உயிர்ப்பலி அநேகமாக முற்றிலும் நீங்கியிருப்பதற்கும், பிராமணர்களும் மற்றைய உயர்சாதி இந்துக்களும் புலாலுணவை அறவே நீக்கி, சாக பக்ஷணிகளாக மாறியிருப்பதற்கும், கோயில்களில் தூய வழிபாடு நடத்தற்கும், மக்கள் எளிய வாழ்க்கை நடத்தற்கும் காரணம், சமண சமயத்தின் கூட்டுறவும் தாக்குதலுமேயாகும்.

ஆத்மாவைப் பற்றி உயர்ந்த கருத்துக் கொள்வதிலும், கர்மத்தின் தன்மையைப் பற்றியும் அது ஆத்மாவோடு கொண்டுள்ள உறவினைப்பற்றியும், சாஸ்திரிக முறையில் ஆராய்ச்சி செய்து விளக்குவதிலும், அஹிம்சையையே எல்லாவற்றிலும் மேலான ஒழுக்கக் கொள்கையாக மேற்கொள்வதிலும், சமண சமயம் ஈடும் எடுப்புமின்றி எல்லாச் சமயங்களிலும் உயர்ந்து விளங்குகின்றது. இந்திய நாட்டில் இலக்கியம், ஓவியம் ஆகிய கலைகளைப் புத்தமும் சமணமும் மிக நல்ல முறையில் பேணி வளர்த்துள்ளன.

## 20. அஹிம்ஸைக் கொள்கையைப் பின்பற்றிய அரசர்க்கரசர் நல்லாட்சிகள்

அஹிம்சைக் கொள்கை, மக்களைத் தாழ்வுறச் செய்து சோம்பலைப் புகுத்தியதாகப் படித்த மக்களும் தவருகக் கருதுகின்றனர். இந்திய நாட்டு வரலாற்றைப் படிக்கின்ற எவரும் சந்திரகுப்தன், அசோகன், காரவேலன், விக்கிரமாதித்தன், அமோகவர்ஷன் முதலிய சமண சக்கரவர்த்திகளின் ஆட்சிக் காலமே மிகச் சிறப்பும் இன்பமும் நிறைந்த நாட்கள் என்பதை அறிய தவறமாட்டார்கள். அவ்வரசர்களெல்லாரும் அஹிம்சையை மேற்கொண்டவர்களே யாவர்.

## 21. கைலாயமலையில் முதற் கோயில்

இந்நாட்டில் * கோயில் கட்டும் முறையைப் புகுத்தப்பெற்றதற்கும் காரணம், சமண சமயத்தின் ஆதிக்கமேயாகும் என்று பொருத்தமாகக் கூறலாம். தீர்த்தங்கரர் நடுவில் உட்கார்ந்திருப்பார். அவரைச் சுற்றிலும் அவரது போதனைகளைக் கேட்பதற்காக எல்லா உயிர்ப்பிராணிகளும் குழுமியிருக்கும். இந்த இடத்திற்குச் சமவ சரணம் எனச் சமணம் பெயர் தருகின்றது. இச்சமவ சரணத்திற்கு வாயில்களோடு கூடிய நான்கு கோபுரங்களும், குளங்கள், நந்தவனங்கள் இசையுங் கூத்தும் நடப்பதற்கேற்ற மன்றங்கள்,

* கோயில் - சிநகரம், என்று அகராதிகளில் கூறும் பொருளால் உணரலாம.

ஆகியவை நிறைந்த ஏழு பிராகாரங்களும் உண்டென்று சொல்லப்படுகிறது. மிகப் பழமையான சமண பரம்பரைச் செய்திகள், பரதர் விருஷப தேவருக்குக் கைலாய மலையில் கோயில் கட்டியதிலிருந்து, தீர்த்தங்கரருக்குக் கோயில் கட்டி அவர்களது உருவங்களை வழிபடும் முறை தோன்றியதெனக் கூறுகின்றன.

இத்தருணத்தில் என்னுடைய கூற்றோடு ஒன்றுபடும் ஒரு வரலாற்று நிகழ்ச்சியைக் கூற விரும்புகின்றேன். கி. மு. 454-ம் ஆண்டிலே கலிங்க நாட்டிலிருந்து நந்தவர்த்தனன் என்னும் அரசன் ஜினருடைய (விருஷபதேவர்) சிலையைக் கவர்ந்து சென்றான். அந்தச் சிலை நீண்டநாளாக பாடலிபுரத்திலிருந்துவந்தது. மகத நாட்டின்மீது படையெடுத்து வெற்றி கொண்டபோது காரவேலன் அச்சிலையை மீட்டுக்கொண்டு வந்தான். உதயகிரி மலையில் கி. மு. 170-ல் பொறிக்கப்பெற்றுள்ள ஹாதிகும்ப்ஹா கல்வெட்டில் கலிங்க நாடாண்ட காரவேல மன்னன் இச்செய்தியைப் பொறித்துள்ளான். அச்சிலையைத் தன்னுடைய தலைநகரில் மீண்டும் பிரதிஷ்டை செய்து விரிவான சடங்குகளோடு பெரிய விழா நடாத்தினான். அந்த விழாவிற்கு வெகு தொலைவிலிருந்த மன்னரெல்லாரும் வந்திருந்தனர். பாண்டிய மன்னன்கூட வந்திருந்தான். இந்தக் கல்வெட்டுச் சான்றிலிருந்து கி. மு. 5—ஆம் நூற்றாண்டிலேயே சமணர்கள் கோயில் வழிபாடு நடத்தினர் என்பதும், அவர்களைப் பின்பற்றித்தான் பிற்காலத்துப் புராண இந்து மதத்தினர் கோயில் வழிபாட்டு முறையை மேற்கொண்டனரென்பதும் வலியுறுகின்றன.

மொழிப்பெயர்ப்பு :—**புதுவை மீனவன்.**

# கவிமலர்

(மாதம் ஒரு புத்தகம்)

நவயுக — நவசக்தி — கவிஞர்களால் எழுதப் பெறும், இயற்கைக் காட்சி, விநோதம், காதல், கடிதம், தொழிலாளர் சக்தி, தமிழின் மேன்மை, தமிழர் வீரம் முதலிய பல விஷயங்களைக் குறித்த கவிதைகளைத் தாங்கி ஒவ்வொரு மாதமும் வெளி வருகிறது. **1 புத்தகம் 0—2—0.**

**12** புத்தகங்கட்கும் ஓராண்டுக்குத்
தபால் கட்டணம் உள்பட ரூ. **2-0-0.**

* * *

# முத்தமிழ் மலர்

(மாதம் ஒரு புத்தகம்)

இது இலக்கியத் துறையில், சிறந்த அறிஞர் களால் எழுதப்பெறும் கட்டுரைகள், கதைகள், ஆராய்ச்சிகள் முதலிய பல அரிய விஷயங்களைத் தன்னகத்தே தாங்கி ஒவ்வொரு மாதமும் வெளி வருகிறது. ஒரு புத்தகம் விலை 0—4—0

ஓராண்டில் வெளிவரும் 12 புத்தகங்கட்கும்
ஓராண்டுக்குத் தபால் கட்டணம் உள்பட ரூ. 3-8-0.

**முன்பணம் அனுப்பி, சந்தாதாரராகச் சேர்ந்துகொள்ளுங்கள்.**

## முத்தமிழ் நிலையம்,

75, வரதாமுத்தியப்பன் தெரு, சென்னை.

# முத்தமிழ் நிலையம்
## புதிய வெளியீடுகள்

**தமிழர் யார்?** *(அரிய ஆராய்ச்சி நூல்)*
ஆசிரியர்: யாழ்ப்பாணம் ந. சி. கந்தையா பிள்ளை
*விலை* 0—8—0

**ஆரியர்-தமிழர் கலப்பு** *(ஷை)* *விலை* 0—8—0

**தமிழ்மொழி ஆராய்ச்சி**

*தமிழ் மொழியின் தோற்றமும் அதன் வளர்ச்சியையுங் குறித்து, ஆராய்ந்து எழுதப்பட்ட அரிய நூல். இதில் தமிழ் வரிவடிவம் எங்ஙனம் பிறந்ததென்பது படத்துடன் விளக்கப்பட்டிருக்கிறது.*
ஆசிரியர்: ந. சி. க. *விலை* 0—8—0

**நடனசுந்தரி**

*பல பத்திரிகைகளாலும், வாசகர்களாலும் பாராட்டப்பெற்ற அரிய சிறு கதைகள் அடங்கிய இந்நூலை ஆடவர் பெண்டிர் இருவரும் விரும்பி வாசிக்கக்தக்கது.* *விலை* 1—0—0

**கலாவல்லி**

*ஆசிரியர்:* வித்துவான் ஆ. ச. ஷண்முகவேல் *அவர்கள் எழுதிய அரிய நாவல்* *விலை* 1—8—0

**பெண்கள் உலகம்**

*இதுவரையில் வெளிவராத புரட்சிகரமான நூல்.*
ஆசிரியர்: ந. சி. க. *விலை* 0—14—0

யாழ்ப்பாணம்

# ந. சி. கந்தையா பிள்ளை அவர்கள்

## எழுதிய அரிய நூல்கள்

| | |
|---|---|
| தமிழர் யார்? | 0—8—0 |
| ஆரியர் தமிழர் கலப்பு | 0—8—0 |
| பெண்கள் உலகம் | 0—14—0 |
| தமிழகம் | 2—4—0 |
| பத்துப்பாட்டு வசனம் | 1—0—0 |
| அகநானூறு வசனம் 1-ம் பாகம் | 1—0—0 |
| ,, ,, 2-ம் பாகம் | 1—0—0 |
| ,, ,, 3-ம் பாகம் | 0—12—0 |
| பதிற்றுப்பத்து வசனம் | 1—0—0 |
| பரிபாடல் வசனம் | 1—0—0 |
| புறப்பொருள் விளக்கம் | 1—0—0 |
| கலித்தொகை வசனம் | 1—8—0 |
| கலிங்கத்துப்பரணி வசனம் | 0—12—0 |

# முத்தமிழ் நிலைய வெளியீடுகள்.

**தமிழர் யார்?** ந. சி. கந்தையா பிள்ளை 0—8—0

**ஆரியர் தமிழர் கலப்பு**

ந. சி. கந்தையா பிள்ளை 0—8—0

**ஏ! தாழ்ந்த தமிழகமே**

திராவிடதளபதி **C. N.** அண்ணாத்துரை **M.A.** 0—8—0

**நடன சுந்தரி**

திரு. ய. லக்ஷ்மிநாராயணன் எழுதியது 1—0—0

இவைதவிர, கலைமகள், சக்தி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், தமிழ்ப்பண்ணை, அன்பு நிலையம், ஜோதி நிலையம், பாரதி பிரசுராலயம், முல்லைப்பதிப்பகம் முதலிய பலபதிப்பகங்களின் புத்தகங்கள் எம்-முத்தமிழ் நிலையத்தில் கிடைக்கும்.

## முத்தமிழ் நிலையம்,

75, வரதாமுத்தியப்பன் தெரு, சென்னை-1.

# முத்தமிழ் மலர்

(மாதம் ஒரு புத்தகம்)

இதில் பல பேரறிஞர்கள் எழுதும் அரிய இலக்கியக் கட்டுரைகளும், இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் எழுதப்படும் பல கதைகளும், சரித்திரங்களும் மாதந்தோறும் வெளிவரும்.

பிரதி 1-க்கு விலை 0—4—0.

ஓராண்டு சந்தா (தபால்கூலி உள்பட) ரூ. 3-8-0.

* * *

# கவிமலர்

(மாதம் ஒரு புத்தகம்)

நவயுக – நவசக்தி – தமிழ் மறுமலர்ச்சிக் கவிஞர்களால் எழுதப்பெறும் கவிதைகளைக் கொண்டது.

1 பிரதி விலை அணா 2.

ஓராண்டு சந்தா (தபால்கூலி உள்பட) ரூ. 2.

* * *

சிந்தனை சைத்ரீகர் "ஜீவா" சித்தரித்திருக்கும்

# வேலைக்காரி

பண்ணையார் மகனுக்கும் பள்ளிப்பெண்ணுக்கும் இடையே நிகழ்ந்த காதலையும் அதன் பயனாக ஏற்பட்ட விளைவுகளையும் அழகுபடச் சித்தரித்திருக்கும் வாழ்க்கைச் சித்திரம்.

கண்ணைக்கவரும் மூவர்ண மேலட்டைப் படத்துடன் கூடிய உயர்ந்த பதிப்பு.

---

## முத்தமிழ் நிலையம்,

75, வரதாமுத்தியப்பன் தெரு, சென்னை 1.



Printed at the
Jothi Press, Triplicane, Madras. Q. H. M. S. No 459-46.



282